வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சிவசங்கரி நாவல்களில் சமூகப் பிரச்சினைகளும் தீர்வுகளும்

**முனைவர் க.கண்ணன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இலொயோலா கல்லூரி, மெட்டாலா.

மின்னஞ்சல் முகவரி - kannananbil1982@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சமூகம் மேன்மை அடைவதற்கு இலக்கியங்கள் துணை நிற்கின்றன. இலக்கியங்கள் பண்படுத்தக் கூடிய வல்லமை கொண்டவை. அவ்வகையில் நாவல் என்னும் புதின இலக்கியங்கள் சிறப்பு வாய்ந்த இலக்கியமாக இருக்கிறது. சிவசங்கரி நாவல்களில் சமூகப் பிரச்சினைகளை எடுத்து விளக்குவதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது. சிவசங்கரி பல நாவல்களை எழுதியுள்ளார். அவ்வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு நாவல்களில் காணலாகும் சமூகப் பிரச்சினைகளான தனிமனிதப் போராட்டம், சமூகத்தில் காணலாகும் சாதியப் பாகுபாடு, பண்பாட்டுச் சிதைவு, ஒருவனுக்கு ஒருத்தி என்னும் தமிழர் பண்பாடு, முதியோர்கள் தமது வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகள், கணவன், மனைவியின் குடும்ப உறவுநிலை போன்ற பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கானத் தீர்வுகளை இக்கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

**கலைச்சொல்லாக்கம்**

புல்லுருவி – ஒட்டண்ணி தாவரம், காணிக்கை – அடியுரை, சமூகம் - மக்கள் கூட்டமைப்பு, தீர்வு - முடிவு

## முன்னுரை

இச்சமூகம் மேன்மை அடைவதற்கும், வளர்ச்சி அடைவதற்கும், மனிதனை மனிதனாக பண்படுத்துவதற்கும் இலக்கியங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் நாவல் இலக்கியம் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. நாவல்களில் சொல்லப்படுகின்ற கதைப்பாங்கு, சமுதாய நிலை போன்றவற்றினை வேறு எந்த இலக்கியம் வாயிலாகவும் சிறப்பாக விளக்கமுடியாது. அந்த வகையில் சிவசங்கரி நாவல்களில் காணலாகும் சமூகப்பிரச்சினைகளையும், அதற்கான தீர்வுகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**சமூகப்பிரச்சினைகளும் தீர்வுகளும்**

மக்கள் வாழும் வாழ்க்கையில் பிரச்சினை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக ஆகிவிடுகின்றது. சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவது ஒரு பிரச்சினை என்பது இருந்து கொண்டுதான் உள்ளது. பிரச்சினைகள் என்று கூறும்பொழுது அதற்கு ஏதாவது ஒரு தீர்வு என்பதும் உண்டு. அவ்வகையில் சிவசங்கரி அவர்கள் சமுதாயத்தில் நிகழும் பிரச்சினைககளையும், அதற்கான தீர்வுகளையும் தமது நாவல்களில் எடுத்துக் கூறியுள்ளார்.

**மனப்போராட்டம்**

ஒவ்வொரு மனிதனுக்கும் மனப்போராட்டம் என்பது உண்டு இது மனிதனை கொஞ்சம் கொஞ்சமாக கொன்றுவிடகூடியது. மனப்போராட்டம் மனிதனுக்கு தீரா நோய் போன்றதாகும். இப்பிரச்சினையையும் அதற்கான தீர்வினையும் திரிவேணி சங்கமம் நாவலின் வழி எடுத்துக்கூறுகிறார். இந்நாவலின் கதையில் இடம்பெறும் சங்கர் என்ற கதாப்பாத்திரம் மனப்போராட்டம் உடையவனாக இருக்கின்றான். மரியா தாம்ஸனிடமிருந்து அந்தக் கடிதத்தைப் படித்தவுடன் அவனுக்கு அச்சம் தோன்றுகிறது. இந்தக் கடிதச் செய்தியை மனைவியிடம் கூறினால், அவள் தம்மீது வெறுப்படைவாளோ அல்லது தன்னைவிட்டுப் பிரிந்து விடுவாளோ என்ற எண்ணமும் ஏற்படுகிறது. இவ்வாறு பலவாறு சிந்திக்கும் அவன் மனக்குழப்பம் அடைகின்றான். இப்பிரச்சினைக்குத் தீர்வாக, **“இது இன்றைய தபாலில் வந்தது அனு, இதை நான் அப்பொழுதே கிழித்துப்போட எண்ணினேன். ஆனால், உனக்குத் தெரியாமல் அப்படிச் செய்ய எனக்கு மனம் வரவில்லை என்று கூறியவாரே அந்தக் காகிதத்தை கொடுத்தான் சங்கர்”**[1] (ப-40) என்ற

மேற்கோளை நோக்கும்போது எதையும் ஒளிவு மறைவு இல்லாமல் பிரச்சினையை மனைவியிடம் கூறி தன்னுடைய மனக்குழப்பம் மற்றும் மனப்போராட்டத்தைத் தீர்த்துக்கொள்வதாக அமைகிறது.

**சாதி வேறுபாடு**

காலங்காலமாக சமூகத்தில் வலுவாக வேரூன்றி, மனித மாண்பினைச் சிதைக்கும் காரணிகளில் சாதிபேதம் என்பதும் ஒன்றாக அமைகிறது. அரசியல், ஆன்மீகம், தொழில், வர்த்தகம் என அனைத்துத் துறைகளிலும் சாதிவேறுபாடு என்பது கலந்துள்ளது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது பழமொழி. இதனை வேரறுக்கும் வகையில் சமுதாய நஞ்சாக சாதிய வேறுபாடு அமைந்துள்ளது. மனித இனம் ஒன்றுபட்டால் மட்டுமே சாத்தியமாகக் கூடிய பல சாதனைகள் சாதிய வேறுபட்டால் இன்னும் தடைபட்டு உள்ளன. சமூகப் புல்லுருவிகள் சிலர் தங்களின் வசதிக்காக மக்களைப் சேதப்படுத்த கையாளும் எளிய சாதனமாக சாதீயம் விளங்குவதை நோக்கமுடிகிறது. சிவசங்கரியின் ‘நெருஞ்சி முள்’ எனும் நாவலில் தலைமைக் கதாப்பாத்திரமான பூமாவுடன் சுகாதாரப் பணியாற்றிவரும் கமலம் கூறுவதாய்,

**“மனுஷனை மனுஷனா மதிக்க முதல்ல ஜாதி பேதங்களை நாம மறக்கனும். நீ பிராமணத்திங்கறதை மறந்திடு நா முதலியார் வகுப்பைச் சேர்ந்தவங்கிறதை மறந்திடுவேன். இரண்டு பேரும் மனுஷ ஜாதி இந்த நினைப்புல இருந்தா போதும்.”**[2]

என அமைந்துள்ள வரிகள் சாதீயத்திற்கான தீர்வாக அமைந்துள்ளது. எனவே மனிதன் மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும். சாதி என்பது தொழில் அடிப்படையில் பிரிக்கப்பட்ட ஒன்று. இதனை கையில் எடுத்துக்கொண்டு வாழ்ந்தால் பிரச்சினைகள் மட்டுமே எஞ்சி நிற்கும். எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படாது. எனவே மனிதன் சாதிபேதமில்லாமல் வாழவேண்டும்.

**பண்பாட்டுச் சிதைவு**

மனிதன் தனக்கு இருக்கக்கூடிய ஆறாம் அறிவான பகுத்தறிவைக் கொண்டு விலங்குகளில் இருந்து வேறுபடுகின்றான். காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப நாகரீகத்தில் மாறுபாடுகள் தோன்றுகின்றன. மாறக்கூடியது நாகரீகம்

மாறாதது பண்பாடு என்றாலும் கூட நாகரீகம் என்ற நச்சின் வாயிலாக பண்பாடும் சிதைவுறுகிறது. இவ்வாறு தொன்றுதொட்டு தொடர்ந்து கடைபிடிக்கப்படும் தமிழர் பண்பாடு சிலநேரங்களில் சிதைக்கப்படுவதை சிவசங்கரி தமது நாவல்களில் எடுத்துக்கூறியுள்ளார்.

மனித உணர்வுகளுக்கு மரியாதை தருதல் என்பது இன்றியமையாதது எனினும் பெண்களின் தனிமனித உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் சமூகத்தில் குறைவாகவே காணப்படுகிறது. பெண்கள் அவர்களது அந்தரங்க வாழ்விலும் கூட பல்வேறு அவலங்களை அனுபவித்து வருகின்றனர். வாழ்வில் அந்தரங்கங்களை வெளிச்சம் போட்டுக்காட்டும் தனிமனித உணர்வுகளை நசுக்குவது இன்றளவும் நடந்து வருகின்றன. தவறான பல பழக்கங்களுக்கு அடிமையாகிவிட்ட ஆண்கள் சிலர் பெண்கள் பலரை திருமணம் செய்து கொள்வதையும் பலருடன் முறையற்ற உறவு கொள்வதையும் கண்டிக்கும் வகையிலும், இதுபோன்ற சமூகப்பிரச்சனை இன்றளவும் நடந்தேறி வருவதையும் சிவசங்கரி சுட்டிக்காட்டுகின்றார்.

**“குடிச்சுட்டு பன்னிரெண்டு மணிக்கு வர்றதும் இல்லாம இந்த மாலினியோட என்னென்ன செஞ்சார்னு விளக்கமா சொல்லி, அது இப்படி பண்ணுவா நீயும் செய்யுனு என்னைக் கட்டாயப்படுத்துவார். போன வாரம் ஒரு பொண்ணோட இருந்தேன். அவ என்ன பண்ணா தெரியுமான்னு புருஷன் பொண்டாட்டி நடுவுல மட்டும் அந்தரங்கமா இருக்கவேண்டிய சமாச்சாரங்களை எல்லாம் கண்டகண்ட தெரு நாய்களோடு அனுபவச்சிட்டு வந்து என்னன்ட விவரமா சொல்லி”**[3] என்று ‘அம்மாபிள்ளை’ நாவலில் சிவசங்கரி ஒரு மனைவி புலம்புவதாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே, சமூகத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்போடு வாழவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். சமூகத்தில் சிலர் செல்வந்தர்களாக இருந்து பண்பாட்டைச் சிதைப்பவர்களாகவும் விளங்குகிறார்கள் என்பதை விளக்குகிறார்.

### ஒருவனுக்கு ஒருத்தி

தமிழரின் வாழ்வியலில் பண்பாடு என்பது உறுதிப்பொருள் போன்றதாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழரின் பண்பாடாகும். இந்தப் பண்பாட்டை சிவசங்கரி தமது நாவலில் படைத்துக்காட்டியுள்ளார். திரிவேணி சங்கமம் நாவலில் சங்கர் என்ற கதாப்பாத்திற்கு ஆண்மை இழந்துவிட்டபோது

அவனது மனைவி அனுராதாவை மறுமணம் செய்து கொள்ளும்படி கூறுகின்றான். அப்பொழுது அனுராதா,

**“உங்களைவிட எனக்கு குழந்தையா பெரிது? உங்களைவிட இந்த உலகத்தில் எனக்கு வேறு உசத்தியானது உண்டா?**[4] (ப.87) என்று கூறுகின்றாள். இதன்மூலம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டை கடைபிடிக்க ஆசிரியர் உணர்த்துவதை அறியமுடிகிறது.

அமெரிக்க நாட்டுப்பெண் மரியா தாம்ஸன் சங்கரை ஒருதலையாக காதலிக்கின்றாள். காலச்சூழ்நிலை காரணமாக இருவரும் இணைகின்றனர். இதன் வாயிலாக அவளுக்குப் பெண் குழந்தை பிறக்கின்றது. அவளைச் சங்கரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், **“உன்பெண்ணை ஏற்றுக்கொள், சங்கர் என் பக்தியின் காணிக்கையாக அவள் உன் நிழலில் வளர வேண்டும். ஏனென்றால் அவள் உடம்பில் உன் இரத்தம் ஓடுகிறது”** [5] என்று கடிதம் எழுதுகிறாள். இதன் வாயிலாக மரியா தாம்ஸனின் நம்பிக்கையைச் சுட்டிக்காட்டி உறவின் வலிமையை ஆசிரியர் திரிவேணி சங்கமம் நாவல் வாயிலாக உணர்த்துகிறார்.

**முதியோர் பிரச்சினைகள்**

இன்றைய சூழ்நிலையில் சமுதாயத்தில் முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றன. வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளைகளுடைய அரவணைப்பும், பாசமும் எதிர்பார்த்து வாழும் நிலையில், பெற்ற பிள்ளைகளே வயதான பெற்றோர்களைப் புறக்கணித்து முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடுகின்றனர். இப்படிப்பட்ட சமூகப்பிரச்சினையையும் ஆசிரியர் சிவசங்கரி எடுத்துக்கூறுகின்றார்.

நெடுஞ்சிமுள் நாவலில் படைக்கப்பட்டிருக்கும் ஷண்முகம் என்ற கதாப்பாத்திரத்தின் வாயிலாக விளக்கியுள்ளார். பொருளாதார குறைவினால் நாயகியை மகன் ஷண்முகமே முதியோர் இல்லத்தில் சேர்க்கும் நிலையை சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு தாயின் மனக்குமுறலாக கூறும்பொழுது,

**“பழையசோறு வடிச்சி நெய்பருப்பு போட்டு பிசைஞ்சி குழந்தையை இடுப்பிலே வைத்து நிலாக்காட்டி சோறு ஊட்டறப்ப இதே வாய் நாளைக்கு நம்மை அசிங்கமாகத் திட்டலாம்னு எத்தனைபேர் நினைச்சுப்பார்க்கிறோம்?**

**ஊட்டி வளக்கற தாய் புண்பட்டுப்போக இதே வாய் காரணம்னு யார் நினைக்கிறோம்? பிஞ்சுக்கால் நோவுமேனு இராத்திரி படுக்கும் முன் தைலம் தடவுவோம், எண்ணெய் தேய்ச்சி உருவி வெந்நீர் ஊற்றுவோம். ஆனால் இந்தக் காலால் நாளைக்கு நம்மை உதைச்சி விரட்டலாம்னு எதிர்பாக்கிறோமா?"**[6]

என்றவாறு புலம்புவதைக் காணமுடிகிறது. 'பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழிக்கு ஏற்ப இன்றைய சூழ்நிலையில் பிள்ளைகள் பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்றனர். எனவே, சமுதாயத்தில் வயதான பெற்றோரை மதித்து அவர்களுக்கு அன்பினை வழங்கி ஆதரித்து போற்ற வேண்டும் என்ற சமூக பிரச்சினையை முன்எடுத்து வைக்கின்றார். எனவே பிள்ளைகள் பெற்றோர்களைப் புறக்கணிக்கும் இழிநிலை மாறவேண்டும்.

**கணவன் மனைவி உறவுநிலை:**

மக்கள் ஒன்றாக சேர்ந்து வாழும் கூட்டமைப்பு சமுதாயம் என்று அழைக்கப்படுகிறது. சமுதாயத்தின் ஒரு பிரிவாக குடும்பம் திகழ்கிறது. ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வது நலமாகும் விட்டுக்கொடுத்து வாழ்வதின் காரணமாக பல பிரச்சினைகள் தீரக்கூடும். ஆனால் இன்றைய சூழலில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாமையால் கணவன் மனைவி உறவில் விரிசல்கள் ஏற்பட்டு குடும்பம் சிதைந்து பிரிந்து வாழும் சூழ்நிலையே காணப்படுகிறது. ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்வது சிறப்புடையதாகும். மனம் விட்டுப் பேசி உண்மையை மறைக்காமல் வாழ்ந்தால் குடும்பம் இனிமையுடையதாக இருக்கும் என்பதை திரிவேணி சங்கமம் நாவலில்,

**"இது இன்றைய தபாலில் வந்தது அனு, இதை அப்பொழுதே கிழித்துப்போட எண்ணினேன். ஆனால் உனக்குத் தெரியாமல் அப்படிச் செய்ய எனக்கு மனம் வரவில்லை."**[7] என்று சங்கர் அவனது மனைவியிடம் கூறும்பொழுது அவனது மனைவி அனு, **"நான் உங்களை எவ்வளவு தூரம் காதலித்தால் உங்கள் பெண் எனக்கு வேண்டும் என்று துடிப்பேன்"** [8] என்று அவளது கணவன் சங்கரிடம் கூறும்பொழுதும் கணவனும் மனைவியும்

ஒருவர்கொருவர் விட்டுக்கொடுத்து உண்மையான நேசத்துடன் வாழ்ந்தால் வாழ்க்கை வளம்பெறும் என்பதை விளக்குகிறார்.

**“அன்பிற்கும் உண்டோ அடைங்குந்தாழ் ஆர்வலர்**

**புன்கணீர் பூசல் தரும்”** [9] **(குறள் .71)**

என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப உண்மையான அன்புடன் கணவனும் மனைவியும் வாழவேண்டும் அன்பின் வாயிலாக அனைத்தையும் சாதிக்கலாம் என்ற கருத்தை ஆசிரியர் திரிவேணி சங்கமம் நாவல் வாயிலாக புலப்படுத்துகிறார்.

**தொகுப்புரை:**

தீர்வுகள் என்பது புரிந்து கொள்வதே ஆகும். சுரியான புரிதல்கள் இல்லாமல் போகும்போதுதான் சிக்கல்கள் தோன்றுகின்றன. எனவே, மனிதருக்குள் புரிதல்கள் என்பது அவசியமாகிறது. புரிதல்கள் இல்லாத சிக்கலின் காரணமாக பிரிச்சினைகள் தோன்றுகின்றன. எனவே இச்சமூகம் மேன்மை அடைய பல்விதமான புரிதல்கள் தேவையாக அமைகின்றன. இக்கட்டுரையில் தனிமனிதனுடைய மனப்போராட்டம், சமூகத்தில் காணலாகும் சாதிமதபேதம், நாகரீக வளர்ச்சியால் மாறிபோகும் பண்பாட்டுச் சிதைவுகள், முதியோர்களின் நிலை, பெண்களின் நிலை, கணவன் மனைவி உறவுநிலை ஆகியன குறித்த பிரச்சினைகள் விளக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திற்கும் தீர்வாக அன்போடு சேர்ந்த புரிதல்கள் தேவை என்பது முன்எடுத்து வைக்கப்படுகிறது. அன்போடும், புரிதல்களோடும் வாழ்ந்து சமுதாயத்தை மேம்படுத்துவோம்.

**சான்றெண் விளக்கம்**

1. சிவசங்கரி, திரிவேணி சங்கமம், ப.40
2. சிவசங்கரி, நெருஞ்சிமுள், ப.72
3. சிவசங்கரி, அம்மா பிள்ளை, ப.127
4. சிவசங்கரி, திரிவேணி சங்கமம், ப.87
5. மேலது, ப.98

*6.* *சிவசங்கரி, நெருஞ்சிமுள், பக். 117-118*

*7.* *சிவசங்கரி, திரிவேணி சங்கமம், 40*

*8.* *மேலது, ப.47*

*9.* *திருக்குறள், குறள் எண்-71*

**துணைநின்ற நூல்கள்**


1. *சிவசங்கரி, திரிவேணி சங்கமம், வானதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு,2006*
2. *சிவசங்கரி, நெருஞ்சிமுள், வானதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு,2020*
3. *சிவசங்கரி, அம்மா பிள்ளை, வானதி பதிப்பகம், சென்னை, 10ஆம்பதிப்பு,2019*
4. *மு.வ. (உரை). திருக்குறள், சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 134வது பதிப்பு,2018*